# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (6.5.2013) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் சார்பில் 8 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள கோயம்புத்தூர் மண்டல அறிவியல் மையத்தினை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள். மேலும், 49 கோடியே 46 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான புதிய கட்டடங்களை திறந்து வைத்து, 203 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள்.

மாறிவரும் காலத்திற்குத் தேவையான பல்வேறு திறன்களைப் பெறும் வகையில் உலகத் தரம் வாய்ந்த உயர்கல்வியினை அனைத்து மாணவ, மாணவியருக்கும் அளிக்க வேண்டும் என்பதே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசின் உயரிய நோக்கமாகும். அந்த உயரிய நோக்கத்தை அடைந்திட புதிய கல்லூரிகள் தொடங்குதல், கல்லூரிகளுக்கான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களை தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையம், தமிழக அரசால் ஒரு தன்னாட்சி நிறுவனமாக 1983–ஆம் ஆண்டு நிறுவப்பட்டு சிறப்பாக இயங்கி வருகிறது. பொதுமக்களிடையே குறிப்பாக மாணவச் சமுதாயத்தினரிடையே அறிவியல் தொழில்நுட்ப விழிப்புணர்வை உருவாக்குவது இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மையத்தின் சார்பில் கோயம்புத்தூரில் 6.50 ஏக்கர் நிலப்பரப்பில், 8 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள மண்டல அறிவியல் மையத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால் 2002–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு தற்போது சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. கல்விப் பணிகளை விரிவாக்கம் செய்யும் பொருட்டும், கிராமப்புற ஏழை, எளிய நலிவுற்ற குடும்பங்களைச் சார்ந்த மாணவ, மாணவியர் உயர்கல்வி பெற்று பயன் பெறும் வகையிலும் கோயம்புத்தூரில் இப்பல்கலைக்கழகத்தின் மண்டல மையம் தொடங்கப்படும் என்றும்; முதுகலைப் பட்டமேற்படிப்பு படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்திருப்பதைக் கருத்தில் கொண்டு பெரம்பலூர், ஈரோடு, கன்னியாகுமரி, விருதுநகர் மற்றும் தருமபுரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் முதுகலைப் பட்டமேற்படிப்பு விரிவாக்க மையங்கள் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் ஆட்சி எல்லைக்குள் தொடங்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி, கோயம்புத்தூரில் தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்தின் மண்டல மையத்தையும்; பெரம்பலூர் – பாரதிதாசன் பல்கலைக்கழகம், ஈரோடு – பாரதியார் பல்கலைக்கழகம், கன்னியாகுமரி – மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், விருதுநகர் – மதுரை காமராசர் பல்கலைக்கழகம் மற்றும் தருமபுரி – பெரியார் பல்கலைக்கழகம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகங்களின் முதுகலை பட்டமேற்படிப்பு விரிவாக்க மையங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

மேலும், கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்தில் 23 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகம், மாணவர்கள் விடுதி, தொழில்நுட்ப மையம், உள்விளையாட்டு அரங்கம் மற்றும் பல்வேறு துறைகளுக்கான கட்டடங்களையும்;

திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியில், அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரியில் பயிலும் 1000 மாணவர்கள் பயன்பெறும் பொருட்டு 26 கோடியே 10 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள் மற்றும் மாணவர் விடுதிகளுக்கான கட்டடங்களையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

விழுப்புரம் மாவட்டம் – சங்கராபுரம்; ஈரோடு மாவட்டம் – பெருந்துறை; அரியலூர் மாவட்டம் – அரியலூர்; கிருஷ்ணகிரி மாவட்டம் – ஊத்தங்கரை; வேலூர் மாவட்டம் – ஜோலார்பேட்டை; தேனி மாவட்டம் – ஆண்டிபட்டி; மதுரை மாவட்டம் – உசிலம்பட்டி மற்றும் செக்கானூரணி ஆகிய எட்டு இடங்களில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளுக்கான புதிய கட்டடங்கள் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 3 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படவுள்ள பல்நோக்கு அரங்கம், நூலகம் மற்றும் பொது கருத்தரங்குக் கூடம் ஆகிய கட்டடங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், உயர்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள்: 6.5.2013